தமிழ் நாடு சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1969 மார்ச் 24.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள் விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 431 முதல் 435 வரை பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

மதுராந்தகம் வட்டத்தில் வீட்டு மனை கோரி மனுக்கள்.

*** 436 வினா : திரு கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுராந்தகம் வட்டம், ஏறுவாக்கம், கெ. கெ. புதூர், ஜானகி புரம், வையாவூர், கத்திரிச்சேரி போன்ற கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் வீட்டு மனைகளுக்கு மனு போட்டு நீண்ட நாட்களாகியும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாமலிருப்பது அரசிற்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், துரித நடவடிக்கை எடுக்கும் உத்தேசமுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ), and (இ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம், ஏறுவாக்கம், புதூர், ஜானகி புரம், வையாவூர், கத்திரிச்சேரி கிராமங்களைச் சேர்ந்த அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கும் பொருட்டு . நிலம் வழங்கப்படுதல் சட்டத்தின் கீழ் நிலங்களை ஒருவகைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கையை அரசாங்கம் எடுத்து வருகிறது.

திரு கே. வினயகம் : அரிஜன மக்களுக்கு வீடு கட்டிக்கொள்வதற்கு மனை கொடுப்பது நல்ல யோசனைதான். ஆனல் அதற்காக நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்படுவது எந்த அடிப்படையிலே செய்யப்படுகிறது ? ஒருசில நஞ்சை நிலமும் புஞ்சை நிலமும் பட்டா இருக்கிற நிலங்கள் கூட ஆர்ஜிதம் செய்யப்படுகிறதே—அதே இடத்தில் புறம்போக்கு நிலங்கள் இருந்தாலும்—அதுபற்றி அமைச்சரவர்கள் என்ன கருதுகிறார்கள் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கூடுமானவரை சர்க்கார் புறம்போக்கு நிலத்தைதான் ஆர்ஜிதம் செய்துவருகிறது. ஆனல், அரிஜன மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற பகுதிகளைவிட்டு நெடுந் தொலைவிலே ஆர்ஜிதம் செய்து கொடுத்தால் அவர்கள் வர மறுக்கிறார்கள். அதன் காரணமாக பட்டா நிலங்களையும் ஆர்ஜிதம் செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது. உணவு தட்டுப்பாட்டையொட்டி அதிகப்படியான விலையுள்ள நஞ்சை தான் இருக்கிறது. வேறு புஞ்சை இல்லையென்றால் அதிகப்படியான நஞ்சை குறைந்த அளவிற்கு ஒரு சென்ட், இரண்டு சென்ட், மூன்று சென்ட் என்ற அளவிற்கு வீட்டு மனைக்காக கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்கிறது.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நிலத்தைக். கையகப்படுத்துவதில் நிறைய காலதாமதம் ஏற்படுவதாக பொதுவாக கருத்து இருக்கிறது. அதை விரைவிலேயே நடவடிக்கை எடுத்து முடிக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம் பட்டா நிலங்களாக இருப்பதால் அதைத் தருவதற்கு சொந்தக்காரர்கள் மறுத்து வழக்குமன்றங்களுக்குச் சென்று விடுகிறார்கள். அரிஜன மக்கள் வசிக்கின்ற இடத்திற்கு அருகாமையிலேயே இடங்களைத் தேர்ந்தெடுக்கவேண்டி இருப்பதால் அதனால் தாமதம் ஆகிறது. இன்னும் வழக்கு மன்றங்களுக்குச் சென்று விடுவதால் இவ்வளவு தாமதம் ஆகிறது.

திரு சி. வீரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, நிலங்களை அரிஜனங்களுக்கு ஆர்ஜிதப்படுத்திக் கொடுப்பதில் 3, 4 மைல்களுக்கு அப்பால் உள்ள புறம்போக்கு நிலங்களைத் தருகிறார்கள். அப்படித் தருவதால் அங்கு குடிபோக அவர்களுக்கு வசதி இல்லாத காரணத்தால் அருகிலே இருக்கின்ற நஞ்சை நிலங்களையோ அல்லது புஞ்சை நிலங்களையோ துரிதமாக ஆர்ஜிதம் செய்து அவர்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதிக தொலைவில் புறம்போக்கு நிலங்கள் இருந்தால் அரிஜன மக்கள் அங்கு செல்ல மறுக்கிறார்கள். அவர்கள் வாழ்கின்ற பகுதியிலேயே அவர்களுக்கு இடம் கொடுக்கவேண்டியிருக்கிறது. அப்படி இடம் கொடுக்கின்றபோது அது பட்டா நிலமாக இருந்தால் நிலத்தினுடைய சொந்தக்காரர்கள் அப்ஜக்ஷன் செய்கிறார்கள். சில நேரங்களில் வழக்கு மன்றங்களுக்குச் சென்று விடுகிறார்கள். அவற்றையெல்லாம் பரிசீலனை செய்வதிலே கால தாமதம் ஆகிறது. எவ்வளவு சீக்கிரத்திலே கொடுக்க முடியுமோ அந்த அளவிற்கு அர்ஜன்சி கிளாஸ்—அவசர சட்டம் என்ற முறையிலே விரைவிலே எடுத்துக்கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்துகொண்டிருக்கிறது.

திரு ஆர். கருப்பையா : அரிஜனங்களுக்குக் கொடுக்கப்படுகிற வீட்டு மனைகளில் வீடு கட்டிக் கொள்வதற்கு அவர்களுக்குப் போதிய வருவாய் இல்லாத காரணத்தினால் வீடு கட்டிக்கொள்ள முடியவில்லை. எனவே அவர்கள் வீடு கட்டிக்கொள்ள வசதியாக இருப்பதற்கு ரூ. 1,000 கடன் தவணையில் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஏற்கெனவே இருந்த அரசு பல இடங்களில் அவர்கள் வீடுகட்டிக்கொள்ள மனைகள் கொடுத்து அவர்கள் ஆறு, ஏழு ஆண்டுகள் வீடுகள் கட்ட முடியாத நிலைமையில் இருப்பதைப் பார்த்து, புதிய அரசு வந்த பிறகு அவர்கள் உடனடியாக அந்த இடங்களில் வீடுகளைக் கட்டிக்கொள்ளவேண்டுமென்று ஒரு எச்சரிக்கை விடுத்தது. நீங்கள் ஆறு மாதங்களுக்குள் வீடுகளைக் கட்டிக்கொள்ளுங்கள், இல்லையென்றால் திருப்பிக் கொடுத்துவிடுங்கள் என்று எச்சரிக்கை செய்தோம். அந்த எச்சரிக்கை நல்ல பலன் அளித்தது. அந்த எச்சரிக்கையின் காரணமாக 86,000 வீட்டு மனைகளிலே, 13,000 வீட்டு மனைகளில் வீடுகள் கட்டப்பட்டன. இன்னமும் கட்டப்படாமல் இருப்பதற்குக் காரணம் அவர்கள் பொருளாதார நிலையில் மிகமிக பின்தங்கிய நிலையில் இருப்பதன் காரணமாகத்தான் கட்ட முடியாமல் இருக்கிறார்கள். அப்போதிருந்த அரசு அவர்களுக்கு நஞ்சை நிலத்தை ஆர்ஜிதம் செய்துகொடுத்தது. அந்த நிலத்தில் மூன்று, நான்கு அடி பள்ளம் இருக்கிறது. வீடுகள் கட்ட வேண்டுமானால் அந்தப் பள்ளத்தை மேடாக்கவேண்டியிருக்கிறது. மேடாக்குவதற்கு அந்த அரசு எந்த உதவியும் செய்யவில்லை. இப்போது அதைச் செய்யவேண்டுமென்றால் லட்சக்கணக்கான ரூபாய் செலவாகும். எப்படியாவது அவர்கள் குடிசைகளையாவது போட்டுக்கொள்வதற்கு உதவ வேண்டுமென்ற முறையில் அவர்களுக்கு ரூ. 125 மான்யமாகவும், ரூ. 125 வட்டியில்லாத கடனாகவும்—அதைப் பொருளாகவோ அல்லது அவர்கள் விரும்புகிற முறையில் பணமாகவோ கொடுக்கின்ற அளவில்—அந்த இடங்களை ஓரளவிற்கு மேடாக்கிக் கொள்ளும் வகையில் ரூபாய் 50 ஆக, மொத்தம் ரூபாய் 300

கொடுத்து அந்த இடங்களில் அவர்கள் வீடு கட்டிக்கொள்வதற்கேற்ற வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. அந்த அடிப்படையிலே அவர்கள் வீடுகள் கட்டிக்கொள்வதற்கு வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு கொளத்தூர் கோதண்டம் : குறிப்பிட்ட எருவாக்கம் கிராமத்தில் நஞ்சை நிலமாக இருப்பதால், அதை வாங்கமுடியாது என்று தெரிவித்திருக்கிறார்கள். நான்கு நாட்களுக்கு முன்னால் அமைச்சர் அவர்கள் வேறு புறம்போக்கு நிலமோ, புஞ்சையோ இல்லை என்று சொன்னால் நிச்சயமாக அதை வாங்குவதற்கு சர்க்கார் உத்தரவு போடும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் அதற்கு உடனடியாக சர்க்கார் உத்தரவு போடுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : எருவாக்கம் கிராமத்திலே ஏற்கனவே அரிஜன மக்களுக்கு 1·99 எக்கர் நிலம் ரூபாய் 2,288-க்கு எடுக்க செயற்குறிப்பு வந்து அதைத் தவிர்த்து வேறு புஞ்சை நிலம் கொடுக்க லாமா என்று மீண்டும் கலெக்டர் அவர்களிடம் கேட்கப்பட்டிருக்கிறது அவர்களுடைய பதில் இன்னும் அரசாங்கத்திற்கு வரவில்லை. ஆனால் வேறு புஞ்சை நிலம் இருக்கிறதா என்று அறிவிப்பார்களானால் அந்த நிலத்தை எடுத்துக்கொள்ளலாம். அப்படி இல்லையென்று சொன்னால் ரூபாய் 2,288-க்கு இந்த நஞ்சை நிலத்தைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அந்த நிலத்தை எடுப்பது பற்றி முடிவாகும்.

கோவை தலைமை மருத்துவ மனையில் தண்ணீர் தட்டுப்பாடு.

* **437 வினா—திரு சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை அரசினர் தலைமை மருத்துவ மனையில் தண்ணீர் தட்டுப்பாடு இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், இக்குறையை நீக்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) and (இ) : தற்போது கோயம்புத்தூர் மாவட்டம் துணை மருத்துவமனைக்கு குடிதண்ணீர் கோயம்புத்தூர் நகராட்சியால் விநியோகிக்கப்படுகிறது. ஆனால் தற்போது இருக்கும் தண்ணீர் பற்றாக் குறைவால் ரூ. 16,300 செலவில் ஒரு குழாய்க் கிணறு கோவைத் தலைமை மருத்துவமனையில் நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், கோவை மருத்துவ மனையில் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது, அதற்காகக் குழாய்க் கிணறுகள் அமைத்துத் தண்ணீர் எடுக்கப் போவதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். தண்ணீரே இல்லாமல் அங்கே பேஷண்டுகளுக்கு ஆபத்து ஏற்படுவதற்கு முன்னாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படுமா ? அதற்கு ஏதாவது கால வரையறை குறிக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஏற்கனவே அந்த மருத்துவ மனையில் பற்றாக்குறை உண்டு. அந்தப் பற்றாக்குறையை நீக்கவேண்டும் என்பதற்காகத்தான் 2 அங்குலம் ஆக இருந்த குழாயை 4 அங்குலம் ஆக அகலப்படுத்தவேண்டும் என்று ஒரு புதிய திட்டத்தையும் 100 படுக்கைகள் கொண்ட வேறு கட்டிடத்திற்கு ஒரு புதிய குழாய்க் கிணறு (போர் வெல்) எடுப்பதற்கான ஒரு திட்டத்தையும் நிறைவேற்றித் தண்ணீரைத் தருகிறோம். ஆனால், அந்தத் தண்ணீரும் இப்பொழுது மருத்துவ மனையில் இருக்கும் அத்தனை பேருக்கும் போதவில்லை. இப்பொழுது மருத்துவ மனைக்கு நகராட்சி தண்ணீர் கொடுத்துக்கொண்டு